**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.**

**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், தை திங்கள் 23ம் நாள்

**இ.ம.எண்.52/2026 & இ.ம.எண்.53/2026**
**இன்**
**அசல் வழக்கு எண்.56/2016**

1. சரசு
2. சரவணன் ..மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

..எதிர்..

1. தங்கமணி (இறப்பு)
2. வெங்கடாசலம்
3. சின்னம்மாள்
4. பாலசுந்தரம் (இறப்பு) ..எதிர்மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 02.02.2026ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சோமசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், 3,4 எதிரமனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>பொதுவான உத்தரவு</u>**

**<u>இ.ம.எண். 52/2026</u> :**

வாதி தரப்பு சாட்சி விசாரணையை மீண்டும் திறக்க அனுமதி கோரி 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இ.ம.எண்.53/2026</u> :**

வா.சா.1ஐ மீண்டும் அழைக்க அனுமதி கோரி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை XVIII விதி 17 ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இ.ம.எண். 52/2026 மற்றும் இ.ம.எண்.53/2026 மனுக்களின் சுருக்கம்</u>:**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வா.சா.1ன் சாட்சியம் கடந்த 29.01.2021ம் தேதியன்று முடிக்கப்பட்டு 13.04.2023ம் தேதியன்று வாய்தா போடப்பட்டு அன்றையதினம் வா.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர்கள் அவர்களது தரப்பு வழக்கறிஞரை தொடர்புகொள்ள இயலாத காரணத்தால் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே, வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அவர்களை மீண்டும் அழைத்து வாதி தரப்பு சாட்சி விசாரணையை மீண்டும் திறக்க அனுமதிகோரி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.52/2026 மற்றும் இ.ம.எண்.53/2026 எதிருரையின் சுருக்கம்</u>.**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 29.09.2021ம் தேதியன்று

வா.சா.1 விசாரிக்கப்பட்டு 24.03.2023ம் தேதியன்று குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு அன்றைய தினம் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் வா.சா.1ன் குறுக்கு விசாரணை இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது. கடந்த 13.04.2023ம் தேதியன்று வா.சா.2 விசாரிக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரகை செய்யாத காரணத்தால் வா.சா.2ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. கடந்த 27.11.2025ம் தேதியன்று எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது. அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**4.** மனுதாரர்கள் தரப்பில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ?என்பதே ஆகும்.

5. **தீர்வு;**

**5.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும், மேற்படி குறுக்கு விசாரணை இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்ட பிறகு, இ.ம.எண்.549/2023 நிலுவையில் இருந்துவந்தது, அதில் தற்போதுதான் தீர்வு காணப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுக்களை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**5.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கான காரணத்தை மனுதாரர்கள் தெரிவிக்கவில்லை என்றும், மூன்று ஆண்டுகள் காலம் கழித்து தக்க காரணமின்றி

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே நீதிமன்றத்தால் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் இம்மனுக்களை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**5.3** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கில் வா.சா.1 மற்றும் வா.சா.2ன் சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு சாட்சியங்கள் இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்ட பிறகு, மூன்றாம் தரப்பினரை அசல் வழக்கில் சேர்க்க கோரி இ.ம.எண்.549/2023 நிலுவையில் இருந்து, கடந்த 14.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இருதரப்பினர்களுக்கும் அவர்களது தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கு போதிய வாய்ப்பளித்து அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, இ.ம.எண்.52/2026. இ.ம.எண்.53/2026 மனுக்கள் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டு, மேற்படி தேதியில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.06 14:07:07 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>

..இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.06 14:07:12 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.